**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 103/2020**

**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | 1 முதல் 3 எதிரிகள் கைது இல்லை.<br>1 முதல் 3 எதிரிகள் தஞ்சாவூர் மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.2849/2016-ல் 26/08/2016 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று 01/09/2016 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 23/01/2017 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 28/12/2020 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | இல்லை |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1- 05/03/2021 / இல்லை<br>அ.சா.2- 05/05/2021 / இல்லை |

| | | | |
|---|---|---|---|
| | | | அ.சா.3- 05/05/2021 — இல்லை<br>அ.சா.4 05/05/2021 — இல்லை<br>அ.சா.5 05/05/2021 — இல்லை<br>அ.சா.6 18/02/2026 — 18/02/2026<br>அ.சா.7 27/02/2026 — 27/02/2026 |
| 6. | கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 27/03/2026 |
| 6 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவுஎதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டுநீதிமன்றத்தால்பிறப்பிக்கபட்ட இடைக்காலதடைஉத்தரவுபற்றியவிவரங்கள் | : | இல்லை |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.04.24 16:28:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ),

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் வெள்ளிக் கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை-11 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 103/2020**

**(CNR.No. TNTJ 270004142020)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.103/2020 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | திருப்பனந்தாள் காவல் நிலையம்<br>குற்ற எண். 301/2016 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>திருப்பனந்தாள் காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. பிரமித், வயது 26/2016,<br>த/பெ. பாலு (எ) பாலசுப்பிரமணியன்,<br>நடுத்தெரு, மணலூர், திருவிடைமருதூர் தாலுக்கா.<br>2. தாஸ், வயது 21/2016 (இறப்பு)<br>த/பெ. கணேசன்,<br>ஆதிதிராவிடர் தெரு, மணலூர்,<br>திருவிடைமருதூர் தாலுக்கா.<br>3. செல்வி வயது 50/2016,<br>க/பெ. பாலு (எ) பாலசுப்பிரமணியன்,<br>நடுத்தெரு, மணலூர், திருவிடைமருதூர் தாலுக்கா. |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 16/08/2016 |
| 6 | முறையீடு | 20/08/2016 |
| 7 | கைது | 1 முதல் 3 எதிரிகள் கைது இல்லை. |
| 8 | பிணையில் விடுவித்தல் | 1 முதல் 3 எதிரிகள் தஞ்சாவூர் மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.2849/2016-ல் |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:28:30 +0530

| | | |
|---|---|---|
| | | 26/08/2016 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று 01/09/2016 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். |
| 9 | விசாரணை துவக்கம் | 05/03/2021 |
| 10 | விசாரணை முடிவு | 24/04/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, இவ்வழக்கில் 1 வது எதிரி மீது எதிரி பிரிவுகள் 294(பி), 324, 427, 506(ii) இதசவின் கீழும், 3 வது எதிரி மீது எதிரி பிரிவுகள் 324, 427, 506(ii) இதசவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 2 வது எதிரி தாஸ் குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு இறந்துவிட்டார். எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய் விட்டது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது 30/09/2020 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24/04/2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.அறிவழகன்**,B.A.,B.L.,

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:28:35 +0530

அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

கடந்த 16/08/2016ம் தேதி இரவு 11.30 மணியளவில் பட்டியல் சாட்சி-1 அரிதாஸ் என்பவரின் வீட்டு முன்பு நிறுத்தியிருந்த TN 51 T 2670 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா பேஷன் பிளே இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கை ரூ.50/- மதிப்புள்ளதை எதிரிகள் உருட்டுக் கட்டையால் அடித்து சேதப்படுத்தியும், ஏன் உடைக்கிறீர்கள் என்று கேட்ட பட்டியல் சாட்சி-1ஐ 1வது எதிரி இந்த "குச்சிக்காரி, தேவடியா மவன சும்மா விடக் கூடாது", என்று அசிங்கமாக திட்டியும், பட்டியல் சாட்சி-1ன் வலது தோளில் உருட்டு கட்டையாலும், 2 வது எதிரி பட்டியல் சாட்சி-1ன் வலது புறங்கையில் உருட்டு கட்டையாலும், 3 வது எதிரி பட்டியல் சாட்சி-1ன் இடுப்பில் உருட்டுக் கட்டையாலும் மாறி மாறி அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1வது எதிரி மீது பிரிவுகள் 294(பி), 323, 427, 506(ii) இதசவின் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 323, 427, 506(ii) இதசவின் கீழும், திருப்பனந்தாள் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:28:40 +0530

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால்,1வது எதிரி மீது எதிரி பிரிவுகள் 294(பி), 324, 427, 506(ii) இதசவின் கீழும், 2 மற்றும் 3 வது எதிரிகள் மீது எதிரி பிரிவுகள் 324, 427, 506(ii) இதசவின் கீழும் குற்றச்சாட்டு வனைந்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து தான் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2 வது எதிரி தாஸ் குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு இறந்துவிட்டார். எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய் விட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பி அ.சா.பொ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 அரிதாஸ் கடந்த 30/04/2020ம் தேதியன்று திருப்பனந்தாள் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.7 முருகேசன் என்பவரிடம் புகார் மனுவைப் பெற்று மனு எண்.238/2016 என பதிவு செய்து மேற்படி மனுவை விசாரித்து 20/08/2016ம் தேதியன்று இரவு 08.30 மணிக்கு நிலைய குற்ற எண்.301/2016-ல்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:28:46 +0530

சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 427, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.5 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 21/08/2016 ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவயிடம் சென்று அ.சா.4 பாலகிருஷ்ணன் மற்றும் அ.சா.5 பாஸ்கர் ஆகியோர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு அன்றைய தினம் காலை 09.45 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த பிளாஸ்டிக்தூள் 5 ஐ மாதிரி துண்டுகள் ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் அ.சா.4 பாலகிருஷ்ணன் மற்றும் அ.சா.5 பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றி சாட்சிகள் இருவரிடமும் கையொப்பம் பெற்றுள்ளார். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் தடயபொருளான பிளாஸ்டிக் மாதிரி துண்டுகள் -5 அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 சுப்ரமணியன், அ.சா.3 ராஜா ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி சாட்சிகளின் விசாரணையிலும், தனது புலன் விசாரணையிலும் வழக்கு சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இந்த வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது மேற்படி எதிரிகள் மூவரும் தஞ்சாவூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பின்பு வழக்கின் தடயப்பொருளை படிவம் 95 ன் மூலம் அனுப்பி வைத்துள்ளனர். படிவம் 95 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 30/09/2016 ம் தேதி திருப்பனந்தாள் அரசு மருத்துவமனை சென்று அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரதீப்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி அ.சா.1க்கு காயச்சான்று பெற்று வந்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:28:52 +0530

முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 30/09/2016 ம் தேதி சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 427, 506(ii) இதசவின் கீழ் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

7. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார் எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**9. விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**10. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.04.24 16:28:57 +0530

12. அரசு தரப்பில் கடந்த 16/08/2016 ம் தேதி இரவு 11.30 மணியளவில் அ.சா.1 அரிதாஸ் என்பவரின் வீட்டு முன்பு நிறுத்தியிருந்த TN 51 T 2670 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா பேஷன் பிளே இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கை ரூ.50/- மதிப்புள்ளதை எதிரிகள் உருட்டுக் கட்டையால் அடித்து சேதப்படுத்தியதாகவும், ஏன் உடைக்கிறீர்கள் என்று கேட்ட அ.சா.1 ஐ, 1 வது எதிரி அசிங்கமாக திட்டியதாகவும், அ.சா.1 ன் வலது தோளில் உருட்டு கட்டையாலும், 2 வது எதிரி அ.சா.1 ன் வலது புறங்கையில் உருட்டு கட்டையாலும், 3 வது எதிரி அ.சா.1 ன் இடுப்பில் உருட்டுக் கட்டையாலும் மாறி மாறி அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

13. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 அரிதாஸ் கடந்த 30/04/2020 ம் தேதியன்று திருப்பனந்தாள் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.7 முருகேசன் என்பவரிடம் புகார் மனுவைப் பெற்று மனு எண்.238/2016 என பதிவு செய்து மேற்படி மனுவை விசாரித்து 20/08/2016 ம் தேதியன்று இரவு 08.30 மணிக்கு நிலைய குற்ற எண்.301/2016-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 427, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 அரிதாஸ் புகார் மனு அளித்துள்ளார். மேற்படி புகார் மனுவினை பரிசீலனை செய்ததில், அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்த நிலையில், கடந்த 16/08/2016 ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் 1. பிரமித், 2.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:29:03 +0530

தாஸ், 3. செல்வி ஆகிய மூன்று நபர்களும் அ.சா.1 ன் வீட்டில் அத்து மீறி வீட்டினுள் நுழைந்து வரண்டாவில் இருந்த அ.சா.1 க்கு சொந்தமான இருசக்கர வாகனம் TN 51 T 2670 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Passon play மற்றும் அங்கு இருந்த பாத்திரங்களை உடைத்தும் அ.சா.1 ன் சத்தம் போட்டு வெளியே வரும் போது "இந்த தேவடியா குச்சிகாரிகளை விடக்கூடாது" என திட்டி கையில் வைத்திருந்த உருட்டு கட்டையால் 1. பிரமித் வலது தோல்பட்டையிலும், 2. தாஸ் வலது புறங்கையிலும், 3. செல்வி இடுப்பிலும் அடித்தார்கள் என்றும், வலி தாங்க முடியாமல் சத்தம்போட ஊரில் உள்ளவர்கள் ஓடிவர மூன்று நபர்களும் அ.சா.1 ஐ பார்த்து இன்னைக்கு நீ தப்பிவிட்டாய் என்னைக்கு இருந்தாலும் எங்கள் கையில் தாண்டா உன் உயிர் என்று கொலை மிரட்டல் விட்டுவிட்டு தெற்கே ஓடிவிட்டனர் என்று புகார் மனு அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

15. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 அரிதாஸ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 16/08/2016 ம் ஆண்டு இரவு 11.30 மணியளவில் தான் வீட்டில் தூங்கி கொண்டிருந்ததாகவும், வெளியே வண்டியை உடைக்கும் சத்தம் கேட்டு வந்து பார்த்த போது எதிரிகள் மூவரும் நின்று கொண்டு குச்சிக்காரி மகனே என்று ஆபாசமாக திட்டி, 1ம் எதிரி கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் தன்னுடைய இடது தோள் பட்டையில் தாக்கினார் என்றும், 2ம் எதிரி கட்டையால் தன்னுடைய இடது கால் தொடையில் தாக்கினார் என்றும், 3ம் எதிரி கட்டையால் தன்னுடைய இடுப்பில் அடித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் புகார் மனுவில் அ.சா.1 ஐ, 1வது எதிரி வலது தோல்பட்டையிலும், 2வது எதிரி தாஸ் வலது புறங்கையிலும், 3வது எதிரி செல்வி இடுப்பிலும் அடித்தார்கள் என்று கூறியுள்ளது அ.சா.1ன் புகார் மனுவிற்கும்,

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:29:08 +0530

சாட்சியத்திற்கும் முன்னுக்கு முரணாக அமைந்துள்ளது. புகார் மனு அ.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 சுப்ரமணியன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் 1ம் எதிரியும், அவரது தாயார் 3ம் எதிரியும் தனது ஊர்காரர்கள் என்றும், 2ம் எதிரி தாஸ் பற்றி தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கில் புகார் அளித்த புகார் பற்றியோ, இவ்வழக்கு பற்றியோ தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.2 வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரியவருகிறது.

17. வழக்கு சம்பவத்தை மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 ராஜா விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 16/08/2016 அன்று இரவு 11.30 மணியளவில் தான் தன்னுடைய வீட்டில் தூங்கிகொண்டிருந்தபோது ஏதோ சத்தம் கேட்டது என்றும், எழுந்து சென்று பார்த்தபோது அ.சா.1 க்கு இடது பக்க தோள் பட்டையில் அடிபட்டு இருந்தது என்றும், அ.சா.1 ன் இரு சக்கர வாகனத்தின் முகப்பு விளக்கை அடித்து நொறுக்கி இருந்தார்கள் என்றும், தான் சென்ற போது எதிரிகள் மூவரும் இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து சென்று விட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகளை பார்த்ததாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.3 வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரியவருகிறது.

18. பார்வை மகசர் சாட்சியாக அ.சா.4 பாலகிருஷ்ணன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும்,

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.04.24 16:29:14 +0530

ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் இடையே தகராறு ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாகவும் வேறு எந்த விவரங்களும் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியமளித்துள்ளார்.

19. மற்றொரு பார்வை மகசர் சாட்சியாக அ.சா.5 பாஸ்கர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 16/08/2016 அன்று இரவு 11.30 மணியளவில் தான் வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது சத்தம் போட்டு வெளியே வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்தது என்றும், விசாரித்ததில் எதிரிகள் அ.சா.1-ஐ தாக்கியதாக சொன்னார்கள் என்றும், காயமுற்ற அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், சம்பவம் நடந்த 4 நாட்கள் கழித்து போலிசார் தனது வீட்டு வாசலில் பார்வையிட்டு படம் வரைந்தனர் என்றும், போலிசார் தன்னை சாட்சி கையொப்பம் செய்ததால் கையொப்பமிட்டதாகவும், தன்னுடன் அ.சா.4 கையொப்பம் செய்தார் என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5 ன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

20. அ.சா.6 பிரவின்குமார், மருத்துவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு திருப்பனந்தாள் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது 17.08.2016 அன்று பகல் 11.00 மணியளவில் தான் மருத்துவமனையில் பணியில் இருந்த போது மணலூர் அக்ரஹாரத்தை சேர்ந்த ரெங்கநாதன் மகன் 41 வயது

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.04.24 16:29:18 +0530

மதிக்கத்தக்க ஹரிதாஸ் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார் என்றும், அவர் சுயநினைவுடன் தான் இருந்தார் என்றும், அவரை விசாரித்தபோது மணலூரில் வைத்து 16.08.2016 அன்று இரவு 10.45 மணியளவில் தனக்கு தெரிந்த நபர் கட்டையால் கையில் தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு வலது கை மணிக்கட்டில் சிறிய வீக்கம் இருந்தது என்றும், அவரை தான் வெளிநோயாளியாக சிகிச்சை அளித்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயம் என்று சான்று வழங்கியதாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். விபத்து பதிவேட்டு நகலுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

21. அ.சா.7 முருகேசன், காவல் உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30/04/2020 ஓய்வுபெற்று தற்போது கொத்துகோவில் கிராமத்தில் வசித்து வருவதாகவும், தான் கடந்த 16/08/2016 ம் தேதி திருப்பனந்தாள் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 அரிதாஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மனு எண் 238/2016 என பதிவு செய்து மேற்படி மனுவை விசாரித்து 20/08/2016 அன்று இரவு 08.30 மணிக்கு நிலைய குற்ற எண். 301/2016 ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 427, 506(ii) இதச-வின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும், பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21/08/2016 ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பாலகிருஷ்ணன் மற்றும் பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:29:25 +0530

தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு அன்றைய தினம் காலை 09.45 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த பிளாஸ்டிக்தூள் 5 ஐ மாதிரி துண்டுகள் ஆகியவற்றை மேற்கண்ட சாடசிகள் பாலகிருஷ்ணன், பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் மனசரில் கைப்பற்றி சாட்சிகள் இருவரிடமும் கையொப்பம் பெற்றதாகவும், வழக்கின் தடயபாருளான பிளாஸ்டிக் மாதிரி துண்டுகள் 5 அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்பு மேற்கண்ட சாட்சிகள் பாலகிருஷ்ணன், பாஸ்கர் இருவரையும் தனித்தனியாக விசாரித்ததாகவும், பின்பு சம்பவ சாட்சிகள் அதிதாஸ். சுப்பிரமணியள், ராஜா ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்படி சாட்சிகள் வழக்கு சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்காமாகவும் தன் வாக்குமூலத்தில் உள்ளதுபடி கூறினார்கள் என்றும், மேற்படி சாட்சகள் விசாரணையிலும் தனது புலன் விசாரணையிலும் வழக்கு சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இந்த வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது மேற்படி எதிரிகள் மூவரும் தஞ்சாவூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், பின்பு வழக்கின் தடயப்பொருளை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தாகவும், பின்பு 30/09/2016ம் தேதி திருப்பனந்தாள் அரசு மருத்துவமனை சென்று அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரதீப்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி அ.சா.1க்கான காயச்சான்று பெற்று வந்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 427, 506(ii) இதச-வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாகவும் சாட்சயமளித்துள்ளார்.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:29:30 +0530

22. அ.சா.6 மருத்துவர் பிரவின்குமார் தனது சாட்சியத்தில் அ.சா.1க்கு தெரிந்த நபர் கட்டையால் கையில் தாக்கியதாக கூறியதாகவும், அவருக்கு வலது மணிக்கட்டில் சிறிய வீக்கம் இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.6 மருத்துவர் பிரவின்குமார் வாக்குமூலத்தில் அ.சா.1க்கு வலது தோள், வலது கை, இடுப்பு ஆகிய இடங்களில் இருந்த காயத்திற்கு சிகிச்சை அளித்து அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை பற்றி சாதாரண காயம் என்று கருத்துரை வழங்கியுள்ளார்.

23. எனவே அ.சா.1க்கு காயம் ஏற்பட்டிருந்தாலும், காயம்பட்ட சாட்சியான அ.சா.1ன் சாட்சியம் மிகுந்த மதிப்புடையது என்ற போதிலும், மேற்கண்டவாறு புகார் மனுவின் மீது பலத்த சந்தேகம் எழுவதாலும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு வழக்கிலும் பலத்த சந்தேகம் எழுவதாலும், அ.சா.1 ன் சாட்சியத்திற்கு அனுசரணையாக வேறு சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதாலும், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

24. எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் மூலம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் மேற்கண்டவாறு அரசு தரப்பில் வழக்கில் மேலும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.04.24 16:29:35 +0530

**25. முடிவாக, இவ்வழக்கில் 1 வது எதிரி மீது எதிரி பிரிவுகள் 294(பி), 324, 427, 506(ii) இதசவின் கீழும், 3 வது எதிரி மீது எதிரி பிரிவுகள் 324, 427, 506(ii) இதசவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 2 வது எதிரி தாஸ் குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு இறந்துவிட்டார். எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய் விட்டது.**

26 இந்நீதிமன்ற வழக்கு சொத்து எண்.556/2020-ல் கண்ட வழக்கு சொத்தான நீலநிறம் கொண்ட 5 பிளாஷ்டிக் துகள் வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 24/04/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:29:42 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. அரிதாஸ் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. சுப்ரமணியன் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. ராஜா (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. பாலகிருஷ்ணன் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.5 | திரு.பாஸ்கர் (பார்வைமகசர் சாட்சி) |
| அ.சா.6 | திரு. பிரவின்குமார் (மருத்துவர்) |
| அ.சா.7 | திரு. முருகேசன் (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 20/08/2016 | புார் மனு |
| அ.சா.ஆ.2 | 21/08/2016 | பாாவை மகசர் |
| அ.சா.ஆ.3 | 21/08/2016 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5 ன் சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 18/08/2016 | விபத்து பதிவேட்டு நகலுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.5 | 21/08/2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 21/08/2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 21/08/2016 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | 21/08/2016 | படிவம் - 95 |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.04.24 16:29:49 +0530

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்;</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1 | -- | நீலநிறம் கொண்ட 5 பிளாஷ்டிக் துகள் |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;</u>** இல்லை

**<u>குறிப்பு;</u>**

1. 1 முதல் 3 எதிரிகள் தஞ்சாவூர் மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.2849/2016-ல் 26/08/2016 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று 01/09/2016 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர்.
2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்து உண்டு.
5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இருப்பு) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.04.24 16:29:55 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)